அவைகளுக்கு நிரந்தரமான ஒரு பரிகாரத்தைக் காணவேண்டும். அப்பொழுதுதான் இந்த அபாயத்தைத் தடுக்க முடியும். அதற்கு, பெய்கின்ற மழை நீரை ஒரு சொட்டு கூட வெளியே போக முடியாமல் " பாண்ட் ஸ்கீம் "களை போட்டு நிறைவேற்ற வேண்டும். அடுத்து, தேக்கப்பட்ட நீரை சீராக, முறையாகப் பயன்படுத்த " ஸ்ட்ரீம் ஸ்கீம் " களைப் போட்டு, ஓடைகள், அணைகளைக் கட்டினால் இத்தகைய அபாயங்களை நிரந்தரமாக நம்மால் தடுக்க முடியும். அதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நமது மாண்புமிகு முதலமைச்சரவர்கள் ஒரு அறிவிப்பைச் செய்திருக்கிறார்கள். இதுவரையிலும் இந்தியா முழுவதிலும் எந்த மாநில அரசும் செய்யாத அறிவிப்பை நம்முடைய தமிழக அரசு செய்திருக்கிறது. தமிழகத்திலே இருந்த அன்றைய அரசாங்கம்கூட செய்யாத ஒன்றை இன்றைக்கு நமது கழக அரசு செய்திருக்கிறது. அதாவது, வெள்ளத்தால் அழிந்துபோன நிலங்கள் எல்லாம் அரசாங்கச் செலவிலேயே " ஃப்ரீ"யாக ரெக்ளமேஷன் செய்து தரப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதற்காக நான் முதல்வர் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தப் பணியை மேற்கொள்கையில் இன்னொன்றையும் நான் சொல்ல விரும்புகிறேன். மணல் மேடிட்ட பகுதிகளை ரெக்ளமேஷன் செய்வதற்கு அதிகாரிகள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அதே நேரத்தில் வெள்ளம் பாய்ந்து பள்ளம் தோண்டப்பட்ட இடங்களை தூர்ப்பதற்கு அதிகாரம் இல்லை என்று அதிகாரிகள் சொல்கிறார்கள். ஆகவே, முதலமைச்சரவர்கள் பள்ளங்களையும் தூர்த்துக் கொடுப்பதற்கு அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பிக்குமாறு இந்த நேரத்தில் நான் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு மட்டுமல்லாமல், கைத்தறி நெசவாளர்களுக்குக் கூட உதவியளிக்கும் அறிவிப்பு ஒன்று வந்திருக்கிறது. ஒவ்வொரு கைத்தறி நெசவாளருக்கும் பாதிக்கப்பட்ட சாமான்கள் வாங்கிக் கொள்வதற்கு 100 ரூபாய் வீதம் இனமாகத் தந்திருக்கிறார்கள். அதைக் கூட இந்தியாவிலேயே இந்த அரசு ஒன்றுதான் செய்திருக்கிறது ; இதுவரையிலே வேறு எந்த அரசும் செய்யவில்லை. அதற்காகவும் நான் அரசாங்கத்தையும், டாக்டர் கலைஞர் அவர்களையும் பாராட்டுகிறேன்.

பொதுவாக, வெள்ளம் — புயல் இவைகளினால் வீடிழந்தவர்களுக்கு நமது அரசாங்கம் இதுவரையிலும் 40 ரூபாய் வீதம் உதவித் தொகை அளித்து வந்தது. இப்போது 80 வீதம் ரூபாய் வழங்கப்படுகிறது. அது மட்டுமல்ல, கடனாக 250 ரூபாய் வீதம் கொடுப்பதாகவும் அறிவித்திருக்கிறார்கள். நமது அரசின் இந்தச் செய்கையை ஏழை எளிய மக்கள் எல்லாம் பாராட்டுகிறார்கள். இதிலே இன்னொன்றையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நாம் இன்று நகரப் புறங்களிலே குடிசைமாற்று வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டித்தருகிறோம். அதே நேரத்தில் கிராமப்புறங்களில் ஆயிரக்கணக்கில் இருக்கின்ற ஏழை எளிய மக்கள், அரிசனங்கள் இவர்களின் நிலைமையும் நாம் எண்ணிப் ார்க்க வேண்டும். அவர்கள் எல்லாம் இன்றைக்கு இருக்க இடம்

இல்லாமல், பல இடங்களிலே — தண்ணீர் கசிந்து வரும் இடங்களில் குடிசைகட்டி, கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கும் வீடுகள் கட்டிக்கொடுக்க ஒரு ஆர்டினன்ஸ் பிறப்பித்தாவது புறம்போக்கு நிலங்களை அல்லது பட்டா நிலங்களைக் கையகப்படுத்திக் கொடுக்க வேண்டும். அதோடு அவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொள்வதற்கு குறைந்தது ஒரு நபருக்கு 500 ரூபாயாவது தருவதற்கு, இப்போது இல்லாவிட்டாலும் அடுத்த பட்ஜெட்டிலாவது முதலமைச்சரவர்கள் அறிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தோமானால், ஏழை எளிய மக்கள், அரிசன மக்கள் எல்லாம் இந்த அரசுக்கு என்றென்றும் கடமைப்பட்டவர்களாக இருப்பார்கள், இந்த அரசை மனமாரப் பாராட்டுவார்கள் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட இடங்களில் எல்லாம் கிணறுகள் மூடிக்கிடக்கின்றன. மோட்டார் பம்புசெட்டுகள் எல்லாம் கெட்டுப்போய் கிடக்கின்றன. பவர் கட்டும் இருப்பதால் ஆயில் பம்பு செட்டுகளைத்தான் பயன்படுத்துகின்ற நிலையில் விவசாயிகள் இருக்கிறார்கள். அதனால் ஆயில் விலை அதிகமாகும். அதனால் சென்ட்ரல் கவர்ன்மென்டிலே சொல்லி, எண்ணெய் விலையைக் குறைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு தூர்ந்துபோன கிணறுகளைச் சரி செய்வதற்காக ஆலங்குளம் சிமின்ட் தொழிற்சாலையிலிருந்து சிமின்ட்டை பெற்று, பஞ்சாயத்து யூனியன்கள் மூலமாக குறைந்த விலையில் சிமின்ட் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(திரு. நா. வீராசாமி தலைமை.)

அடுத்து, கெமிக்கல் உரங்களை எடுத்துக்கொள்வோமானால் நமக்கு கிட்டத்தட்ட 6 லட்சம் டன் நைட்ரஜன் தேவைப்படுகிறது. ஆனால் 1·30 இலட்சம் டன்கள் தான் கிடைத்திருக்கிறது. நமது நாட்டிலே ரசாயன உரங்கள் உற்பத்தியாகாமல் இல்லை. நமது நாட்டில் உற்பத்தியாவதே நமக்குப் போதும். நெய்வேலி, எண்ணூர், மணலி போன்ற இடங்களில் யூரியா ஏராளமாக உற்பத்தி செய்யப்படுகிறது. இங்கே உற்பத்தியாகும் உரங்கள் வெளி மாநிலங்களுக்கும் அனுப்பப்பட வேண்டியிருப்பதால், நமக்கு பற்றுக்குறை ஏற்படுகிறது. மத்திய அரசாங்கம் வெளி மாநிலங்களுக்கு அனுப்ப வேண்டும் என்று சொல்கிறது. "மாநிலச் சுயாட்சி" என்று முதலமைச்சரவர்கள் கேட்கின்றபோது பலருக்கு கோபம் வருகிறது. மாநில சுயாட்சி கிடைத்தால் நமது தேவைக்குப் போக மீதமுள்ளவற்றை மட்டும் கொடுத்தால் போதும். இப்போது வெளியே போவதைத் தடுக்க நமக்கு அதிகாரம் இல்லை.

அடுத்து நீர்வளங்களை சீரிய முறையில் பயன்படுத்துவதற்காக மேற்கு மலைத்தொடர் மேம்பாட்டுக் கழகம் ஒன்றை அமைப்பது குறித்து ஆளுநர் உரையில் அறிவித்திருக்கிறார்கள். இது ஒரு பாசன மேம்பாடு செய்யும் திட்டமாகும் (மணியடிக்கப்பட்டது). இதன் மூலம் நீர்நிலைகளை எல்லாம் ஒருங்கிணைத்து, நீரினைத் தேக்கி வைத்து, சிறந்த முறையில் பயன்படுத்துவதற்கு நல்ல வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.